செ.வெ.எண் :- 889 நாள் :- 09.10.2010.

## தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

### ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகர்

### திடக்கழிவு மேலாண்மை குறித்து விழிப்புணர்வு முகாம்

**செய்திக் குறிப்பு** **09–10–2010**

தமிழக அரசு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் மாற்றுக்குடியமர்வு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகர் திட்டப்பகுதியில் **15,656** மாடிக்குடியிருப்புகளை கட்டியுள்ளது. சென்னை நகர் பகுதியில் நிறைவேற்றப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களால் பாதிக்கப்படும் குடும்பங்களையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் இத்திட்டப்பகுதியில் குடியமர்த்தியுள்ளது.

சமுதாய கட்டமைப்பு வசதிகளான குடிநீர், மின்சாரம், பள்ளிகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், போக்குவரத்து வசதி, ஆரம்ப சுகாதார நிலையம், நியாய விலைக்கடை, காவல் நிலையம், வேலைவாய்ப்புப் பயிற்சி மையம், பூங்கா, சமுதாயக்கூடம், கடைகள் போன்றவைகள் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் இப்பகுதியில் திட்டங்களை நிறைவேற்றும் வகையில் மகளிர் சுய உதவிக்குழுக்களை அமைத்தல், கல்விக் கூடங்களை நடத்துதல், சுகாதார தேவைகளை செய்து கொடுத்தல் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களும் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளன.

இத்திட்டப்பகுதியில் அன்றாடம் சுமார் 7.75 மெட்ரிக் டன் குப்பை சேகரிக்கப்படுகின்றது. இங்கு சேகரிக்கப்படும் குப்பைகளை முறைப்படுத்தும் திட்டம், ஹேண்ட் இன் ஹேண்ட் / சீட் அறக்கட்டளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் நிதி உதவியுடன் உள்ளூர் மக்களின் பங்கேற்புடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதில் 72 பசுமை நண்பர்கள் 32 மூன்று சக்கர மிதிவண்டிகளின் உதவியுடன் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் திடக்கழிவுகளைச் சேகரித்து வருகின்றனர். திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் பற்றி முறையான பயிற்சி பெற்ற இப்பசுமை நண்பர்கள், சாலைகளையும், பொது இடங்களையும் சுத்தம் செய்கின்றனர். மேலும் வீடு வீடாகச் சென்று சேகரித்த குப்பைகளையும் ஒரு பொதுவான இடத்திற்கு கொண்டு சென்று அப்புறப்படுத்துகின்றனர். இவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், சீருடைகளுடன் கூடிய பாதுகாப்புக் கவசங்கள் அனைத்தும் வாரியம் மூலம் வழங்கப்படுகிறது.

குப்பைகளே இல்லாத ஒரு பகுதியாக கண்ணகி நகரை மாற்றியமைக்கும் வகையில் சுமார் 5000 சதுர அடி பரப்பளவில் சுமார் ரூ.37.00 இலட்சம் செலவில் மண்புழு உரம் தயாரிக்கும் மையம் கட்டப்பட்டு வருகிறது. இப்பணிகள் இரண்டு மாதங்களில் முடிந்த பின் இப்பகுதியில் சேகரிக்கப்பட்ட குப்பைகள் மகளிர் சுய உதவி குழுக்களின் உதவியோடு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு மண்புழு உரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் சென்னை சமூகப்பணி மாணவர்களின் முழு பங்கேற்புடனும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக மேலும் ஒரு சுகாதார முகாம் மற்றும் விழிப்புணர்வு முகாம் 09.10.2010 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு தொடங்கி வைக்கப்பட்டது.

**மாண்புமிகு குடிசைமாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் சுப. தங்கவேலன் அவர்கள் இந்த விழிப்புணர்வு முகாமை துவக்கி வைத்து இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் குப்பை சேகரிக்கும் கூடைகளையும், திடக்கழிவுகளை சேகரிக்கும் பணியாளர்களுக்கு சீருடைகளையும் வழங்கி சிறப்பித்தார்கள்.** இந்நிகழ்ச்சியில் சுற்றுப்புற சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பேரணி, மருத்துவ முகாம் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரி, முகமது சதக் கல்லூரி, சென்னை கிறித்துவ கல்லூரி, டி.பி. ஜெயின் கல்லூரி, தொழிலாளர் கல்வி நிலையம் ஆகிய கல்லூரிகளின் மாணவ, மாணவியர்கள் விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. அ. இராமலிங்கம், இ.ஆ.ப., புனித தோமையர் மலை ஒன்றியக்குழுத் தலைவர் திரு. ஏழுமலை அவர்கள், ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சித் தலைவர் திரு. ஏகாம்பரம் அவர்கள், செம்மஞ்சேரி ஊராட்சித் தலைவர் திரு. தனசேகரன் அவர்கள் மற்றும் வாரிய தலைமைப் பொறியாளர், தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர், வாரியப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

9/10/2010

**தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்**

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9